டைட்டானிக்

தொலைந்து போனது கண்டுபிடிக்கப்பட்டது

ஜூடி டோனெல்லி

படம்: கீத் கோஹ்லர்

டைட்டானிக்

தொலைந்து போனது கண்டுபிடிக்கப்பட்டது

ஜூடி டோனெல்லி

படம்: கீத் கோஹ்லர்

தமிழில் : ஆர்வின்

Random House New York

1

அற்புதமான கப்பல்

அன்று ஏப்ரல் 10 , 1912.

உலகம் முழுவதும் ஒரு அற்புதமான புதிய கப்பலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் டைட்டானிக்.

இந்தக் கப்பல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு தனது முதல் கடல் பயணத்தைத் தொடங்கத் தயாராகி வருகிறது.

செய்தித்தாள்கள் டைட்டானிக்கை "அற்புதமான கப்பல்" என்று அழைத்தன. அவர்கள் அதை ஒரு மிதக்கும் அரண்மனை என்று வர்ணித்தனர். டைட்டானிக் கப்பலில் உணவகங்கள், அலுவலகம் மற்றும் சவாரி செய்வதற்கு ஒரு பொம்மை ஒட்டகத்துடன் கூடிய உடற்பயிற்சி கூடத்தையும் கொண்டிருந்தது.

இந்தப் புகைப்படம் கப்பலின் குறுக்குவெட்டுத் தோற்றத்தைக் காட்டுகிறது மேல் தளங்களில் ஆடம்பரமான அறைகள் உள்ளன. அடித்தளத்தில், நீங்கள் ஸ்குவாஷ் மைதானங்களையும் நீச்சல் குளத்தையும் காணலாம்.



உலகம் கண்டதிலேயே மிகப்பெரிய கப்பல் டைட்டானிக் ஆகும். இது தோராயமாக நான்கு நகரங்களின் நீளமும் பதினொரு மாடி கட்டிடத்தின் உயரமும் கொண்டது.

சிறந்த விஷயம் என்னவென்றால், டைட்டானிக் கப்பல் இதுவரை கட்டப்பட்ட கப்பல்களிலேயே மிகவும் பாதுகாப்பானது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். அது மூழ்கடிக்க முடியாதது என்று அவர்கள் கூறினார்கள். ஏன் ? அந்தக் கப்பலுக்கு ஒரு அடித்தளம் இல்லை— அதற்கு இரண்டு அடித்தளங்கள் உள்ளன. ஒன்றுக்குள்ளே மற்றொன்று உள்ளது.

டைட்டானிக்கின் அடித்தள பகுதி பதினாறு நீர் புகாத பெட்டிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பெட்டியில் தண்ணீர் நிரம்பத் தொடங்கினால் , கேப்டன் ஒரு சுவிட்சை இழுத்தால் போதும். இது ஒரு தடிமனான எஃகு கதவை மூடி, தண்ணீரைப் பிடித்து வைக்கும். பின்னர் கப்பலின் மற்ற பகுதிகளுக்குள் தண்ணீர் செல்ல முடியாது. இரண்டு , மூன்று அல்லது நான்கு பெட்டிகளில் கூட நீர் நிரப்பப்படலாம். ஆனாலும் , டைட்டானிக் மிதக்கும்.

டைட்டானிக் கப்பலுக்கு இன்னொரு பெயரும் உண்டு - "பணக்காரனின் சிறப்பு". உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் சிலர் டைட்டானிக்கில் பயணம் செய்தனர். அவர்களின் டிக்கெட்டுகளின் விலை ஒரு மாலுமியின் வாழ்நாள் சம்பளத்தை விட அதிகம்.

எல்லா பயணிகளும் பணக்காரர்கள் அல்ல. சிலரிடம் மிகக் குறைந்த பணம் மட்டுமே உள்ளது. அவர்கள் மகிழ்ச்சிக்காக பயணம் செய்யவில்லை. அவர்கள் அமெரிக்காவில் ஒரு புதிய வீட்டைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள்.

இறுதியாக அந்த சிறப்பான தருணம் வந்துவிட்டது. டைட்டானிக் கப்பல் பயணம் செய்யத் தயாராகி விட்டது!

கரையில் ஒரு கூட்டம் கூடியிருக்கிறது. கொடிகள் அசைகின்றன. ஒரு இசைக்குழு இசைக்கிறது.

பயணிகள் தங்கள் நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தளத்திற்கு வந்துள்ளனர்.

என்ஜின்கள் சத்தமிடுகின்றன. கப்பல் மெதுவாக துறைமுகத்தை விட்டு வெளியேறுகிறது. டைட்டானிக் கப்பல் தனது முதல் பயணத்தைத் தொடங்கிவிட்டது.

இது அவர்களது கடைசிப் பயணம் என்று யாருக்கும் தெரியாது.

2

பனிப்பாறை

அது ஏப்ரல் 14, 1912. டைட்டானிக் கனடா கடலில் பனிக்கட்டி நீரில் சென்று கொண்டிருக்கிறது.

நள்ளிரவு நெருங்கிவிட்டது. கப்பல் அமைதியாக இருக்கிறது. கடல் கண்ணாடி போல மென்மையாக இருக்கிறது. காற்று கடும் குளிராக இருக்கிறது.

பயணிகள் நன்றாக சாப்பிட்டார்கள். சிலர் இன்னும் சீட்டாட்டம் ஆடுகிறார்கள். பெரும்பாலானோர் தங்கள் அறைகளில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இரவு நேரம் தான் உள்ளே இருக்க நல்ல நேரம். ஆனால் காவல்காரன் ஆபத்தை அறிந்து கொள்ள எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவன் கப்பலின் மேல் காகக் கூட்டில் நிற்கிறான். இருளில் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

திடீரென்று காவலாளி ஒரு இருண்ட வடிவத்தைக் காண்கிறான். அது ஒரு பனிப்பாறை! டைட்டானிக் கப்பல் நேராக அதனை நோக்கி செல்கிறது! காவலாளி எச்சரிக்கை மணியை அடிக்கிறான். அவன் , " நேர் முன்னால் பனிப்பாறை!" என்று கத்துகிறான்.

கீழே ஒரு மாலுமி கப்பலை இயக்கிக் கொண்டிருக்கிறார். அவர் கப்பலை திருப்ப முயற்சிக்கிறார், ஆனால் அது மிகவும் தாமதமாகிவிட்டது.

ஒரு பெரிய பனிப்பாறை கப்பலின் பக்கவாட்டில் உராய்ந்து கொண்டிருக்கிறது.

ஏதோ அடிக்கிற சத்தம். தேய்க்கிற சத்தம். அது அதிக சத்தமாக இல்லை. சிலர் அதைக் கேட்கவே இல்லை.

ஆனால் கேப்டன் விரைவாக தனது அறையை விட்டு வெளியேறி, கப்பல் சேதமடைந்துள்ளதா என்று பார்க்க கீழே செல்கிறார். விரைவில் அவர் பயங்கரமான உண்மையைக் காண்பார்.

பனிப்பாறை கப்பலை கடுமையாக சேதப்படுத்தியுள்ளது. தண்ணீர் உள்ளே கொட்டுகிறது. ஐந்து பெட்டிகள் ஏற்கனவே தண்ணீரால் நிரம்பியுள்ளன. அது மிக அதிகம். இப்போது எதுவும் செய்ய முடியாது.

அது சாத்தியமற்றதாகத் தெரிகிறது. ஆனால் அது தான் உண்மைதான். டைட்டானிக் மூழ்கப் போகிறது!



கேப்டன் உத்தரவு பிறப்பிக்கிறார். பயணிகளை எழுப்புங்கள்! உதவிக்கு ரேடியோவை பயன்படுத்துங்கள்! உயிர் காக்கும் படகுகளை தயார் நிலையில் வைத்திருங்கள்!

கேப்டன் மிகவும் பயந்துவிட்டார். கப்பலில் 2,227 பேர் இருக்கும் இந்தக் கப்பலில் 1,100 பேருக்கு மட்டுமே போதுமான உயிர்காக்கும் படகுகள் இருப்பதாக அவருக்குத் தெரியும்.

பயணிகளுக்கு இது எதுவுமே தெரியாது. மக்கள் கப்பலின் மேல்தளத்தில் ஏறும்போது , அவர்கள் சிரித்து நகைச்சுவையாகப் பேசுகிறார்கள். சிலர் மாலை நேர உடை அணிந்திருக்கிறார்கள். சிலர் பைஜாமாவுக்கு மேல் உயிர் காக்கும் உடையை அணிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இன்னும் கூட மூழ்க முடியாத ஒரு கப்பலில் இருப்பது போல் உணர்கிறார்கள்.

"முதலில் பெண்களும் குழந்தைகளும் உள்ளே செல்லுங்கள். இடம் இருந்தால் மட்டுமே ஆண்கள் உள்ளே செல்லுங்கள்" என்று கப்பலோட்டிகள் சொல்கின்றனர்.

பலர் அதில் ஏற விரும்பவில்லை. அந்தப் பெரிய கப்பல் மிகவும் பாதுகாப்பானதாகத் தெரிகிறது , ஆனால் சிறிய உயிர் காக்கும் படகுகள் அப்படி இல்லை.

கப்பலோட்டிகள் அவசரத்தில் உள்ளனர். அவர்கள் கடுமையான சிக்கலில் இருப்பதை அவர்கள் அறிவார்கள். எனவே விரைவாக மக்களை உயிர் காக்கும் படகுகளில் ஏற்றுகிறார்கள். சில உயிர் காக்கும் படகுகள் மட்டுமே நிரம்பியுள்ளன , ஆனால் கப்பலோட்டிகள் அப்படியும் அவற்றைக் கீழே இறக்குகிறார்கள்.

பல பயணிகள் உயிர்காக்கும் படகுகளிலிருந்து வெகு தொலைவில் உள்ளனர். அவர்களின் விதி மிகவும் மோசமானது. அவர்களின் அறைகள் கீழே உள்ளன. அவர்களுக்கும் பிரச்சனை வந்துவிட்டது என்பது தெரியும், ஆனால் எங்கு செல்வது என்று தெரியவில்லை. சிலர் தங்கள் வழியைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் மண்டபங்களில் ஏறி இறங்குகிறார்கள். சிலருக்கு கப்பலோட்டிகள் உதவுகிறார்கள். பெரும்பாலானவர்கள் கீழே காத்திருக்கிறார்கள்.

வானொலி அறையில் உள்ள ஆபரேட்டர் உதவிக்கு அழைக்கிறார். மற்ற கப்பல்கள் பதிலளிக்கின்றன, ஆனால் அவை பல மைல்கள் தொலைவில் உள்ளன.

கலிஃபோர்னியன் என்ற ஒரு கப்பல் கொஞ்சம் அருகில் இருக்கிறது. அது டைட்டானிக்கிலிருந்து பத்து மைல் தொலைவில்தான் செல்கிறது. அது சில நிமிடங்களில் மூழ்கும் கப்பலை அடைந்து அனைவரையும் காப்பாற்றும்.

டைட்டானிக்கின் ஆபரேட்டர் பலமுறை அழைத்தாலும், கலிஃபோர்னிய கப்பல் பதிலளிக்கவில்லை. இரவு நேரம், கப்பலின் வானொலி ஒலிக்கவில்லை. உதவிக்கான அழைப்புகளை யாரும் கேட்கவில்லை.

டைட்டானிக் கப்பல் கலிஃபோர்னிய கப்பலுக்கு சமிக்ஞை செய்ய முயற்சிக்கிறது. அது வானவேடிக்கைகளை போன்ற ராக்கெட்டுகளை வீசுகிறது. கலிஃபோர்னிய மாலுமிகள் ராக்கெட்டுகளைப் பார்க்கிறார்கள், ஆனால் டைட்டானிக் கப்பல் சிக்கலில் இருப்பதை அவர்கள் உணரவில்லை. எனவே அவர்கள் நெருங்கி வரவில்லை.



டைட்டானிக்கில் இசைக்குழு இசைக்கிறது. இசை மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் மக்கள் இப்போது பயந்து போயிருக்கிறார்கள். அவர்களின் கால்களுக்குக் கீழே கப்பல் தளம் சாய்ந்து கொண்டிருக்கிறது.

கப்பல் இன்னும் இன்னும் சாய்ந்து மூழ்கிக் கொண்டிருக்கிறது. கீழ் தளங்கள் நீரில் மூழ்கி விட்டன.

இரண்டு உயிர்காக்கும் படகுகள் எஞ்சியுள்ளன , ஆனால் கப்பலோட்டிகளால் அவற்றை பயன்படுத்த முடியவில்லை. நூற்றுக்கணக்கான மக்கள் இன்னும் கப்பலில் உள்ளனர், இப்போது, அவர்களுக்கும் முடிவு நெருங்கிவிட்டது என்பது தெரிந்துவிட்டது.

ஒரு வயதான தம்பதியினர் கைகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மனைவி தன் கணவனை விட்டுப் பிரியாமல் அருகிலேயே இருக்கிறாள். ஒரு மனிதன் தனது சிறந்த ஆடைகளை அணிந்து கொள்கிறான். "நான் ஒரு கனவான் போல இறப்பேன் ," என்று அவன் கூறுகிறான்.

சிலர் பனிக்கட்டி நீரில் குதிக்கின்றனர். அவர்களில் சில அதிர்ஷ்டசாலிகள் உயிர்காக்கும் படகை அடைகிறார்கள்.





உயிர்காக்கும் படகுகளில் உள்ளவர்கள் டைட்டானிக்கிலிருந்து விலகிச் செல்கிறார்கள். எல்லோரும் அழகான அந்தக் கப்பலைப் பார்க்கிறார்கள், அதன் விளக்குகள் பிரகாசமாக பிரகாசிக்கின்றன. உயிரோட்டமான இசை தண்ணீரில் எதிரொலிக்கிறது.

பின்னர் இசை மாறுகிறது. இசைக்குழு ஒரு சோகமான பாடலை இசைக்கிறது.

அந்தப் பிரமாண்டமான கப்பலின் ஒரு முனை மெதுவாகக் கடலுக்குள் சரிகிறது. இசை நின்றுவிடுகிறது. ஒரு உரத்த இரைச்சல் கேட்கிறது. மில்லியன் கணக்கான தீப்பொறிகள் காற்றில் பறக்கின்றன. கப்பலின் மறுமுனை நேராக மேலே ஆடுகிறது.

ஒரு கணம், டைட்டானிக் நட்சத்திரங்களைப் பார்க்கிறது. பின்னர், அது கடலின் ஆழத்திற்குள் கருப்பு நீரில் மறைகிறது.



3

மீண்டும் ஒருபோதும்

15 ஆம் தேதி அதிகாலை 2:20 மணி .

டைட்டானிக் கப்பல் போய்விட்டது.

உயிர்காக்கும் படகில் உள்ளவர்கள் இரவை வெறித்துப் பார்க்கிறார்கள். வானம் நட்சத்திரங்களால் நிரம்பியுள்ளது, ஆனால் இருட்டாக இருக்கிறது. மேலும் கடும் குளிரும் இருக்கிறது.

பெரும்பாலான உயிர் காக்கும் படகுகள் ஒன்றையொன்று விட்டு விலகிச் சென்றுவிட்டன.

மக்கள் காத்திருக்கிறார்கள். அவர்கள் சூடாக இருக்க முயற்சிக்கிறார்கள். சிலர் மேல் கோட்டுகள் அணிந்திருக்கிறார்கள். மற்றவர்கள் துண்டு மற்றும் செருப்புகளை அணிந்திருக்கிறார்கள். ஒருவர் உள்ளாடை மட்டுமே அணிந்திருக்கிறார். கப்பலில் இருந்து குதித்து படகிற்கு நீந்திச் சென்றவர்கள் மிகவும் குளிராக உணர்கிறார்கள். அவர்களின் தலைமுடி மற்றும் உடைகள் உறைந்துவிட்டன.

ஒரு உயிர்காக்கும் படகு தலைகீழாக கவிழ்கிறது. படகு மூழ்காமல் இருக்க சுமார் முப்பது பேர் அதன் மீது நின்று கொண்டு ஊசலாடுகிறார்கள். பனிக்கட்டி அலைகள் அவர்களின் கால்களில் மோதுகின்றன.



ஒரு உயிர்காக்கும் படகு உதவி செய்யத் திரும்புகிறது. அவர்கள் மரப்பலகையின் மீது மிதந்து கொண்டிருந்த ஒரு மனிதனைக் காப்பாற்றுகிறார்கள். அவர்களால் அதற்கு மேல் யாரையும் காப்பாற்ற இயலவில்லை. பனிக்கட்டி நீரில் யாரும் நீண்ட நேரம் உயிர்வாழ முடியாது.

நேரம் சென்று கொண்டே இருக்கிறது. வானம் இருண்டு கொண்டே வருகிறது. உதவி ஒருபோதும் வராது போலிருக்கிறது. திடீரென்று ஒரு வெளிச்சம் மின்னுகிறது. பிறகு இன்னொன்று. அது ஒரு கப்பல் - கார்பதியா. அது ஐம்பத்தெட்டு மைல் தொலைவில் இருந்து வருகிறது.

அத்தனை பேரும் ஆர்ப்பரிக்கிறார்கள். வெளிச்சத்தை உருவாக்க கைக்குட்டைகள் முதல் அனைத்தையும் எரிக்கிறார்கள் . அந்த கப்பலுக்குத் தங்களைக் காட்ட விரும்புகிறார்கள்.

சூரியன் உதிக்கத் தொடங்குகிறது. சுற்றிலும் பனிப்பாறைகள் உள்ளன. மீட்புக் கப்பல் ஒன்றுடன் மோதுவதற்கு கிட்டத்தட்ட தயாராக உள்ளது , ஆனால் சரியான நேரத்தில் திரும்புகிறது. கப்பல் உயிர்காக்கும் படகுகளை நோக்கி தனது பயணத்தைத் தொடர்கிறது.

இறுதியாக, உதவி வந்துவிட்டது.

அனைவரின் பார்வையும் மீட்புக் கப்பலின் மீதுதான். படகுகள் படகுகளாக மாறி மாறி மக்களை ஏற்றிச் செல்கிறது அந்தக் கப்பல். கடல் கொந்தளிப்பாக இருக்கிறது அதனால் அதற்கு பல மணி நேரம் ஆகும். ஆனால் இறுதியில், அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.

விரைவில், உலகம் முழுவதும் செய்தி பரவியது: மூழ்கடிக்க முடியாத டைட்டானிக் மூழ்கிவிட்டது. 2,200 க்கும் மேற்பட்டோர் பயணம் செய்த அந்தக் கப்பலில் 705 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர்.

எப்படி ? ஏன் ? யாருக்கும் புரியவில்லை.

மீட்புக் கப்பல் நியூயார்க்கை வந்தடையும் போது 40,000 பேர் காத்திருந்தார்கள். டைட்டானிக் கப்பல் விபத்தில் உயிர் பிழைத்தவர்கள் தங்கள் கதைகளைச் சொல்கிறார்கள்.

உலகம் உண்மையைக் கற்றுக்கொள்கிறது. மிகவும் பாதுகாப்பான கப்பல் கூட உண்மையில் பாதுகாப்பாக இல்லை.

டைட்டானிக் கப்பலுக்கு மிகவும் தாமதமாகிவிட்டது, ஆனால் மற்ற கப்பல்களுக்கு இது மிகவும் தாமதமாகவில்லை.

புதிய பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. வடிவமைப்பு மாற்றங்கள் செய்யப்பட்டன.

இன்று, ஒவ்வொரு கப்பலிலும் ஒவ்வொரு பயணிக்கும் போதுமான உயிர்காக்கும் படகுகள் இருக்க வேண்டும். மேலும் விபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்று மக்களுக்குத் தெரியப்படுத்த ஒவ்வொரு கப்பலும் உயிர்காக்கும் படகு பயிற்சிகளையும் நடத்துகிறது.

கப்பலின் ரேடியோக்களை ஒருபோதும் அணைக்க முடியாது. உதவிக்கான ஒவ்வொரு அழைப்பும் கேட்கப்படும்.

இப்போது ஒரு சிறப்பு பனிக் கண்காணிப்பு உள்ளது. கண்காணிப்பு விமானங்கள் ஆபத்தான பனிப்பாறைகளைக் கண்காணிக்கின்றன. அவை கப்பல்களை எச்சரிக்கின்றன. இப்போது, மீண்டும் ஒரு பனிப்பாறை ஒருபோதும் எந்தக் கப்பலையும் ஆச்சரியப்படுத்தி மூழ்கடிக்க முடியாது.

டைட்டானிக் கப்பல் ஒரு பயங்கரமான இழப்பு, ஆனால் உலகம் அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டது.

4

இறுதியாக கிடைத்தது.

வருடங்கள் பல கடந்து சென்றன. டைட்டானிக் கப்பல் பல மைல்களுக்குக் கீழே கரிய, குளிர்ந்த பனிக்கட்டி நீரில் கிடந்தது

எந்த நீர்மூழ்கி வீரரும் இவ்வளவு ஆழமான நீரை அடைய முடியாது. இதுவரை யாராலும் அந்தக் கப்பலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கீழே உள்ள வரைபடம் டைட்டானிக் மூழ்கிய இடத்தை தோராயமாகக் காட்டுகிறது.



சிலர் டைட்டானிக் கப்பல் உடைந்துவிட்டதாக நம்பினர், அது மில்லியன் கணக்கான துண்டுகளாக உடைந்திருக்கலாம் என்று கூறினர்.

இருப்பினும், புதையல் வேட்டைக்காரர்கள் அந்த அற்புதமான கப்பலைப் பற்றி தொடர்ந்து கனவு கண்டனர், அதில் தங்கம், வைரங்கள் மற்றும் முத்துக்கள் உள்ளன என்று நம்பினர்.

ராபர்ட் பல்லார்டு என்ற ஒருவரும் டைட்டானிக் கப்பலைக் கனவு கண்டார். அவர் கடல்களைப் பற்றி ஆய்வு செய்த ஒரு விஞ்ஞானி.

ராபர்ட் மாசசூசெட்ஸில் உள்ள பிரபலமான வூட்ஸ்-ஹோல் ஆய்வகத்தில் பணிபுரிந்தார். அவருக்குப் புதையல் பற்றி கவலை இல்லை. அவர் கப்பலைக் கண்டுபிடிக்க விரும்பினார். அவர் அதைப் பற்றி பல வருடங்களாக யோசித்தார்.

ராபர்ட் ஒரு சிறந்த கண்டுபிடிப்பை உருவாகினார். அது ஒரு வகையான நீருக்கடியில் செல்லும் ரோபோ. அது "ஆர்கோ" என்று அழைக்கப்பட்டது.

" ஆர்கோ" மிக மிக ஆழமாக மூழ்கிச் செல்ல முடியும் . அதில் விளக்குகள் மற்றும் ஒரு காணொளி கருவி இருந்தது. அது கடலின் அடிப்பகுதியில் மிதக்க முடியும். அது நீருக்கடியில் காணொளிப் படங்களை எடுக்க முடியும். மேலும் அது அவற்றை கப்பலில் உள்ள ஒரு தொலைக்காட்சி திரைக்கு அனுப்ப முடியும்.

ராபர்ட் டைட்டானிக் பற்றி தன்னால் முடிந்த அனைத்தையும் படித்தார். வரைபடங்களையும் புகைப்படங்களையும் பார்த்தார். இறுதியாக, அவர் தயாராக இருந்தார். மர்மமான கப்பல் எங்கே காத்திருக்கிறது என்பது தனக்குத் தெரியும் என்று அவர் நினைத்தார்.

1985 ஆம் ஆண்டு கோடையில் , ராபர்ட் விஞ்ஞானிகள் குழுவுடன் வடக்கே நியூ:பவுண்ட்லாந்திற்குப் பயணம் செய்தார். அவர்கள் "ஆர்கோ"வையும் அவர்களுடன் எடுத்துச் சென்றனர்.

ராபர்ட் ஆர்கோவை வேட்டையாட அனுப்பினார். அவர்கள் தங்கள் கால்களை நனைக்கக்கூட வேண்டியதில்லை, ஆனால் அவர்கள் மிகக் கவனமாக கண்காணிக்க வேண்டியிருந்தது. இது பல நாட்கள் தொடர்ந்தது. அவர்கள் பார்த்ததெல்லாம் மீண்டும் மீண்டும் மணலை மட்டுமே.

பின்னர், இறுதியாக, திரையில் வித்தியாசமான ஒன்று தோன்றியது. அது ஒரு கப்பலா ? ஆம் , அது ஒரு பெரிய கப்பல்.

மற்ற விஞ்ஞானிகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். அவர்கள் அதைச் செய்து விட்டனர். அவர்கள் டைட்டானிக்கைக் கண்டுபிடித்துவிட்டார்கள்!

ராபர்ட்டால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஒரு பிசாசைப் பார்ப்பது போல் இருந்தது. டைட்டானிக் கப்பல் கடலின் அடிப்பகுதியில் கிடந்தது. அது உடைந்திருந்தது. ஆனால் அது இன்னும் எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதை ராபர்ட்டால் பார்க்க முடிந்தது.

நாட்கள் செல்லச் செல்ல, ராபர்ட் கப்பலை மேலும் மேலும் பார்த்தார். காவலாளி முதன்முதலில் பனிப்பாறையைக் கண்ட காகத்தின் கூட்டை அவர் பார்த்தார். மணலில் ஒரு அழகான கண்ணாடி ஜன்னல் இருந்தது. கப்பலின் பெரிய நங்கூரங்கள் அங்கே இருந்தன. மது பாட்டில்கள் சிதறிக்கிடந்தன. சூட்கேஸ்களும் அப்படியே இருந்தன.

அது அத்தனை அற்புதமாக இருந்தது. ஆனால் அத்தனை சோகமாகவும் இருந்தது. பயணத்தில் நிறைய பேர் புறப்பட்டிருந்தனர். அதனால் வெகு சிலரே திரும்பி வந்தனர்.



ராபர்ட் இறுதியில் வீடு திரும்பினார். டைட்டானிக் கப்பலை எங்கே கண்டுபிடித்தேன் என்று யாரிடமும் சொல்லவில்லை. கப்பல் அப்படியே இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். புதையல் வேட்டைக்காரர்கள் வந்து அதைக் கொள்ளையடிப்பதை அவர் விரும்பவில்லை.

ராபர்ட் டைட்டானிக்கிற்குத் திரும்ப விரும்பினார். ஒரு வருடம் கழித்து, அவர் அதைச் செய்தார். டைட்டானிக்கின் மேல்தளத்தில் ஒரு சிறிய நீர்மூழ்கிக் கப்பலில் சென்று இறங்கினார். கப்பலுக்குள் ஒரு ரோபோவை அனுப்பினார்.

ராபர்ட் அங்கிருந்து எதையும் எடுத்துச் செல்லவில்லை. ஆனால் அவர் எதையோ விட்டுச் சென்றார். அது ஒரு செய்தி. டைட்டானிக்கைக் கண்டுபிடிக்கக்கூடிய எவருக்கும் அவர் அதை விட்டுச் சென்றார். இந்த மிகப்பெரிய கப்பலை அமைதியாக விட்டுச் செல்லுங்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள மக்கள் ராபர்ட்டின் பணிகளால் ஈர்க்கப்பட்டனர். சிலருக்கு இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவர்கள் டைட்டானிக் கப்பலில் பயணம் செய்திருந்தனர்.

அப்போது அவர்கள் சிறு குழந்தைகள். இப்போது மிகவும் வயதானவர்கள்.

ஆனால் அவர்கள் "மூழ்கடிக்க முடியாத டைட்டானிக்" கப்பலை ஒருபோதும் மறக்கவில்லை.

உலகம் டைட்டானிக்கை ஒருபோதும் மறக்காது.

டைட்டானிக்

தொலைந்து போனது கண்டுபிடிக்கப்பட்டது

டைட்டானிக்
இப்போது வரை
உலகம் கண்ட மிகப்பெரிய கப்பலாக
இருக்கிறது.
மக்கள் அது மிகவும் பாதுகாப்பான கப்பல்
என்றார்கள்.
ஆனால் முதல் பயணத்திலேயே
டைட்டானிக் கப்பல் கடலின் அடிப்பகுதியில்
மூழ்கியது!
இந்த கொடூரமான சம்பவம் எப்படி நடந்தது ?
இந்தப் பெரிய கப்பலின் சிதைவுகள் இப்போது
எங்கே ?
இந்த பரபரப்பான உண்மைகளைக் கதையில்
தெரிந்து கொள்ளுங்கள்.